[6th March 1969

உண்மை. 64.5 என்பதை 63.5 ஆகக் குறைக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால் அரசாங்கம் அதை 64 என்று விசேஷச் சலுகையாகக் குறைத்தது. 1—10—1968 முதல் அந்தப் பருவத்திற்கு மட்டும் அது குறைக்கப்பட்டது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, உற்பத்தியாகும் நெல்லில் ஒரு பகுதிக்கு ஒரு விதமாக இருக்கிறது. சில ஜில்லாக்களில் 64 சத விகிதத்துக்கு அதிகமாகக் கிடைக்கிறது. சில ஜில்லாக்களில் குறைவாகக் கிடைக்கிறது. சில பிரிவுகளில் சில சதவீதம் குறைவாகவும் சிலவற்றில் கூடுதலாகவும் இருக்கிறது. இவையெல்லாம் எப்படி நிர்ணயிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கூடுதலாகவும் குறைவாகவும் இருப்பதால்தான் சராசரி கணக்கெடுத்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

Mechanical driers

* 137 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(a) whether it is a fact that the Mechanical Driers installed by the Food Corporation in Thanjavur district were not utilised for even a single day during the Kuruvai season; and

(b) if so, the reasons therefor?

நெல் உலர்த்தும் கருவிகள்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை மாவட்டத்தில் உணவு கார்ப்பரேஷன் அமைத்த நெல் உலர்த்தும் கருவிகள் குறுவை அறுவடையில் ஒரு நாள் கூட உபயோகிக்கப்படவில்லை என்பது சரியா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை.

(இ) சென்ற ஆண்டு குறுவை நெல் அறுவடை செய்த பொழுது, மழை இல்லை. எனவே, நெல்லில் அதிக ஈரமில்லாததால், நெல்லை உலர்த்தும் கருவிகளில் உலர்த்த வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. ஆகவே 1968-ம் ஆண்டு குறுவை அறுவடையின்போது இக்கருவிகள் அதிக அளவில் உபயோகிக்கப்படவில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இந்தக் கருவிகள் எவ்வளவு ரூபாய் மூலதனத்தில் அமைக்கப்பட்டன? ஒரு நாளைக்கு எத்தனை டன் நெல் அதில் உலர்த்தலாம்? சாதாரணமாக அப்படி உலர்த்துவதால் சர்க்காருக்கு என்ன லாபம் கிடைக்கிறது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இந்த நெல் உலர்த்தும் இயந்திரம் ஒன்றை நிறுவுவதற்கு ரூ. 2,91,000 செலவாகிறது. மொத்தம் ரூ. 87,32,000 செலவானது. ஒரு நாளைக்கு 160 டன் நெல் உலர்த்தலாம்.

திரு. வி. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அமைத்துள்ளதைப் போல நெல் உலர்த்தும் இயந்திரத்தை மதுரை மாவட்டத்திலும் ஏற்படுத்த அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: மதுரைக்கு அது தேவையில்லை. தஞ்சையைப் பொறுத்தவரையில் குறுவை அறுவடை சமயத்தில் ஈரம் சாக்கிறது என்ற காரணத்தால், அந்த ஈரத்தை உலர்த்தி உடனடியாக மற்ற இடங்களுக்கு அனுப்ப வேண்டியிருப்பதால் நெல் ஈரத்தால் முளைத்துவிடாமல் பாதுகாப்பதற்காகத்தான் தஞ்சையில் அது வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. டி. வி. தேவராஜ முதலியார்: வட ஆற்காடு மாவட்டம் தஞ்சைக்கு அடுத்தபடி நெல் உற்பத்தி செய்யப்படும் இடம். ஆகையால் அந்த மாவட்டத்தில் ஒரு உலர்த்தும் இயந்திரம் வைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இந்த நெல் உலர்த்தும் இயந்திரம் வட ஆற்காட்டிற்குத் தேவையில்லை.

திரு. என். ஆர். தியாகராஜன்: கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட இந்த இயந்திரத்தில் ஒரு நாளைக்கு 160 டன் தான் உலர்த்தமுடிகிறது. மாதத்திற்கு 4,500 டன், ஒரு வருஷத்திற்கு 50 ஆயிரம் டன் தான் உலர்த்த முடியும். ஆனால் தஞ்சையில் 8 லட்சம் டன்னுக்கு மேலாகக் கொள்முதல் செய்கிறோம். ஆகையால் 50 ஆயிரம் டன் நெல்லுக்காக ஒரு கோடி ரூபாய் செலவில் இயந்திரம் அமைக்க வேண்டுமா? அதனால் ஏற்படும் வட்டி நஷ்டம் எவ்வளவு என்பதை அரசு ஆராய்ந்ததா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: இது இந்திய ஃபுட் கார்ப்பரேஷனால் அமைக்கப்படுவது. நாம் செய்வதல்ல. மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ரூ. 2,91,000-த்தை ரூ. 1,91,000 என்று குறைத்துக் கணக்கிட்டார்கள். அதைக் கூட்டி கணக்குப் போட்டு மத்திய அரசுக்கு வேண்டுமானால் உறுப்பினர், ஆலோசனை சொல்லலாம்.

Hindi Pandits

* 138 Q.—THIRU G. KRISHNAMOORTHY (on behalf of THIRU M. RAJAH IYER): Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state—

(*a*) whether any permanent Hindi Pandits employed in the Service Homes under the Women's Welfare Department, have been ousted from service consequent on the language policy of the Government; and

(*b*) if so, whether any alternative employment has been given to such affected teachers?